# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## ஹைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றம்
## (கூட்டிணைத்தல்)

**ஹைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றதைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ குமார வெல்கம அவர்களால் 2022, ஓகத்து மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, யூலை மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

**[ *133 ஆம் சட்டமூலம்* ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**றைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றம்**
**(கூட்டிணைத்தல்)**

## றைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

“றைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறநிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, றைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

றைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) றைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் “கூட்டிணைக்கப்பட்ட குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “றைகம்புர சமுதாய அபிவிருத்தி மன்றம்” என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட

கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்*

**3.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) மனைசார் கைத்தொழில் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்கான திட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நெறிப்படுத்தல்;

(ஆ) வீதி அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் திட்டங்கள், மருத்துவமனைகள், சனசமூக நிலையங்கள் நிர்மாணிக்கப்படுதல் போன்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்தல்;

(இ) சிறுவர்களினதும் பெண்களினதும் அநாதைப் பிள்ளைகளினதும் பயனுக்காக மனைசார் நலனோம்பல் செயற்பாடுகளை மேம்படுத்துதல், தெருவோரக் குழந்தைகளை அரவணைத்தல்;

(ஈ) சுயதொழில் வாய்ப்புக்களின் பொருட்டு இளைஞர்களையும், யுவதிகளையும் ஊக்குவித்து அதற்காக பயிற்சி வழங்கப்படுதல், கடன் வசதிகள் வழங்கப்படுதல், சந்தை வாய்ப்புகளை வழங்குதல்;

(உ) கிராமிய மற்றும் பின்தங்கிய பிரதேசங்களை அவற்றில் காணப்படுகின்ற இயற்கை வளங்களைப் பயன்படுத்தி முன்னேற்றுதல்;

(ஊ) அதிகூடிய அனுகூலங்களைப்பெற்றுக்கொள்வதற்காக நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி விவசாய, பெருந்தோட்ட மற்றும் மீன் பிடித்துறைகளை முன்னேற்றுதல்;

(எ) விஞ்ஞானக் கல்வியை முன்னேற்றுதல் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்காக தகவல் தொழில்நுட்ப நிலையங்களை பிரதேசத்தில் நிறுவுதல்;

(ஏ) அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைகளை துரிதமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக விரயத்தைத் தடுத்து மக்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கப்படும் வகையில் அரசாங்கத்தின் முன்மொழிவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளித்தல்;

(ஐ) மனிதாபிமான விளையாட்டுக்கள், இலக்கியம், நுண்கலை ஆன்மீக செயற்பாடுகளை முன்நேற்றுதல் மற்றும் ஊக்குவித்தல்;

(ஒ) இனம், மதம் சாதி பாகுபாடுகள் இன்றி கல்வி, மத, கலை மற்றும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக உதவியளித்தல் மற்றும் பல்வேறுபட்ட விழாக்களையும் போட்டிகளையும் நடாத்துதல்;

(ஓ) ஏழை மக்களுக்கும் நோயாளர்களுக்கும் மருத்துவ சலுகைகள் மற்றும் உதவிகள் வழங்கப்படுதல், வயது முதிர்ந்தோர் மற்றும் இடம்பெயர்ந்தோர் சார்பாக வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் பேணி வருதல், சிறுவர் இல்லங்களை நிறுவுதல் மற்றும் சிறுவர் மற்றும் வயது முதிர்ந்தோர் பகல்நேர பராமரிப்பு நிலையங்களைத் தாபித்தல்;

(ஔ) மேற்படி குறிக்கோள்களுக்கு நிகரான குறிக்கோள்களைக் கொண்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளின் ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் குறிக்கோள்களின் அமுலாக்கலில், கூட்டுத்தாபனம், அத்தகைய அமுலாக்கலானது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை, பிறப்பிடம் அல்லது ஏதேனும் அத்தகைய ஏதுக்கள் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டுமென உறுதிப்படுத்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்

**4.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தினது வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இந்த நிதியத்திலிருந்து-

(அ) மன்றத்தின் பணிப்பாளர் சபை அதன் பணிகளையும் சேவைகளையும் நிறைவேற்றும்போது சிற்சில செலவுத் தலைப்புகளின்கீழ் செலவு செய்ய வேண்டிய பணம்;

(ஆ) மன்றத்தின் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்;

(இ) உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தொண்டு ஊழியர்கள் மன்றத்தின் சிற்சில நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளும் செலவுகள்;

(ஈ) தபால் கட்டணங்கள், தந்திகள், தொலைபேசி அழைப்புகள், காகிதாதிகள் மற்றும் அச்சிடல் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படும் செலுத்தல்கள்;

(உ) பணிப்பாளர் சபையின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தில் அறக்கொடைகளுக்காக மேற்கொள்ளப்படும் செலுத்தல்கள்;

(ஊ) கணக்காய்வுக்கான கட்டணங்கள்;

(எ) அலுவலக பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தேவையான பணம் செலுத்தப்படுதல் வேண்டும். மேலும் மன்றத்தின் பயன்பாட்டுக்காக ஒரு வாகனம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சில வாகனங்களை தேவைக்கு ஏற்ப கொள்வனவு செய்வதற்கு அல்லது வாடகை அடிப்படையில் பெறுவதற்குச் செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ஏ) மன்றத்திற்கான வங்கிக் கணக்குகள் மன்றத்தின் இரண்டு உத்தியோகத்தர்களினால் பேணி வரப்படுதல் வேண்டும். அதாவது பொருளாளர் மற்றும் தலைவர் அந்த உத்தியோகத்தர்களாக அமைதல் வேண்டும் என்பதோடு காசோலைகளில் ஒப்பம் இடுவதற்கான தத்துவமும் அவர்கள் இருவரையும் சார்ந்திருத்தல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**5.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்க வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்**

**6**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப் பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலாகுதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் உப குழுக்கள்**

**7**. தேவை ஏற்படும் சகல சந்தர்ப்பங்களிலும் பின்வரும் வகையிலான பணிகளின் நிமித்தம் உப குழுக்களை நியமிப்பதற்கான தத்துவத்தினை தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சிரமதானங்கள், முகாம்கள், கல்விசார் கருத்தரங்குகள், சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்கள், பொது வர்த்தக நிலையங்கள், கண்காட்சிகள், சிறுவர் நலனோம்பல் நடவடிக்கைகள், கல்வி விஜயங்கள், மரநடுகை இயக்கங்கள், வீட்டுத்தோட்ட கருத்திட்டங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி கருத்திட்டங்கள் போன்ற பணிகள்;

(ஆ) ஓர் அங்கத்தவரால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்ட தவறான நடத்தைகள் அல்லது பதவி வகிப்போர் ஒருவரால் மன்றம் தவறாக கையாளப்பட்டதாக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளபோது அவற்றை விசாரித்தல்;

(இ) மன்றத்தின் குறிக்கோள்களுக்கு அமைவாக வேறு பணிகள்;

(ஈ) உபகுழு ஒன்றில் ஆகக் குறைந்தது பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் உட்பட மூன்று பேர் உள்ளடங்க வேண்டும் என்பதோடு ஏனையோர் அங்கத்தவர்களுக்கு மத்தியிலிருந்து நியமிக்கப்படலாம்;

(உ) தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் குழுவொன்றை கலைத்து அதற்குப் பதிலாக புதிய உபகுழு ஒன்றை நியமிப்பதற்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அதிகாரம் கொண்டதாக இருத்தல் வேண்டும்;

(ஊ) மேலும் மன்றம் அமைந்துள்ள பிரதேசத்திற்கான பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அல்லது மாவட்டத்தில் உள்ள ஏனைய அங்கத்தவர்களுக்கு மன்றத்தின் சேவையினை வழங்குவதற்காக பிரதிநிதி ஒருவரை நியமித்து தொழிற்பாட்டுக் குழு ஒன்றை நியமித்தல்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**8.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் அல்லது அவர்களை பதவி நீக்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்:

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனத்திற்காக நியதிகளும் அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்:

(ஈ) சபையானது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதன் கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நடாத்துதல்:

(உ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்:

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும், கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமைந் தோராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுத் தத்துவங்கள்

**9**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்பட்டக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல் புனரமைத்தல் மற்றும் வேறு வகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும்:

ஆயின், சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப் பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்தலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை குழு தீர்மானிக்கக்கூடியதான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**10.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவகித்தலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளின்மூலம் தவிசாளர், செயலாளர், பொருளாளர் உட்பட 11 பேர்களைக்கொண்ட எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ளதும், (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) முகாமைச் சபையினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப அங்கத்தவரும் இன்றைய தலைவருமான திரு. எம். லஷ்மன் குரே அவர்கள் பணிப்பாளர் சபையின் வாழ்நாள் தலைவராக இருக்க வேண்டும் என்பதோடு அதன் பின்னர் பதவி தாங்குநரின் குடும்ப அங்கத்தவர் ஒருவர் பணிப்பாளர் சபைின் அடுத்து வரும் தலைவராக இருத்தல் வேண்டும்.

*பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் செயற்பொறுப்பு*

**11.** பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் செயற்பொறுப்பு:-

(1) தலைவர்-

(அ) சபைக்கு தலைமை தாங்குதல்;

(ஆ) மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் சோதித்தல்;

(இ) பணிப்பாளர் சபையின் தீர்மானங்களை பொதுச் சபைச் கூட்டத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஈ) பணிப்பாளர் சபையின் தீர்மானங்களின் அடிப் படையில் அங்கத்தவர்களை நீக்குதல்,

(2) செயலாளர்-

(அ) வருடாந்த பொதுச் சபை கூட்டத்தையும் மற்றும் பணிப்பாளர் சபையின் கூட்டங்களையும் கூட்டுதல், மன்றத்தினதும் பணிப்பாளர் சபையினதும் அறிக்கைகளைப் பேணிவருதல், மன்றத்தின் ஆவணங்களை ஒப்பமிடுதல் மற்றும் பணிப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்படு கின்ற ஏனைய பணிகளை நிறைவேற்றுதல்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஆவணங்களை யும் தமது உடைமையில் பேணிவருதல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல்;

(ஈ) ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதத்திற்கு முன்னர் பொதுச் சபைக் கூட்டத்தைக் கூட்டுதல்.

(3) பொருளாளர்-

(அ) கூட்டுத்தாபனத்தின் அனைத்து நிதிகளுக்கும் பொறுப்பாகவிருத்தல் மற்றும் பணிப்பாளர் சபையின் பணிப்புரையின் பிரகாரமும் தலை வரின் கட்டளையின் பிரகாரமும் செலவுகளை மேற் கொள்ளுதல்;

(ஆ) வருமதிகள் மற்றும் செலுத்தல்கள் பற்றிய ஏடுகளை முறையாகப் பேணிவருதல்;

(இ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான உபகரணங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக தேவையான பொருட் பதிவேடுகளையும் ஆவணங்களையும் பேணுதல்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அனைத்து நிதிகளையும் உத்தியோகத்தர் குழாத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வங்கி ஒன்றில் கட்டாயமாக வைப்புச் செய்தல் மற்றும் தேவையான வகையில் அவற்றை மன்றத்தின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்ததுல்;

(உ) வருடாந்த கணக்கு அறிக்கையினை கணக்காய்வு செய்து இறுதியில் பணிப்பாளர் சபைக்கும் பொதுச் சபைக்கும் சமர்ப்பித்தல்.

மன்றத்தினால் செலுத்த வேண்டிய வையும் மன்றத்திற்கு செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத் திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற் பானவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்கு செலுத்தப் படலும் வேண்டும்.

கலைக்கப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்

**13.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, பொதுக்கூட்ட மொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும் பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை*

**14.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் மற்றும் சபையின் மேலுமோர் உறுப்பினர்களது முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபையினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான சபையின் அத்தகைய பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்